# குடியேறிய பல்இன மக்களின் நீரிழிவு நோய்க்கான ஒரு சமூக வழிகாட்டி: வரமுன் கண்டுபிடிக்கவும் கட்டுப்படுத்தவும் ஏற்ற மாதிரித் திட்டங்கள்

## இச் சமூக வழிகாட்டி ஏன் உருவாக்கப்பட்டது?

கனேடிய நீரிழிவுச் சங்கத்தின் கணிப்பின்படி கனேடியர்களில் நாலில் ஒருவருக்கு நீரிழிவு நோய் அல்லது நீரிழிவின் ஆரம்ப அறிகுறி காணப்படுவதால், இப்போக்குத் தொடரும்போது மூன்றில் ஒருவர் இந்நோயால் தாக்கப்படுவர். நீரிழிவு நோய் பீடிக்கக்கூடிய அதிக சாத்தியமுடையவர்களாய் அல்லது பீடிக்கப்பட்டவர்களாய் தெற்கு ஆசியா, கிழக்கு ஆசியா, ஆபிரிக்கா, ஹிஸ்பானிக் (வட-அமெரிக்க பழங்குடி) மக்கள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளார்கள். கனடாவின் அதிகமான புதிய குடிவரவாளர்கள் நீரிழிவு நோய் கூடுதலாயுள்ள நாடுகளைச் சேர்ந்தவர்கள். ஆகவே இம்மக்களின் நீரிழிவு நோயானது கனடாவில் ஒரு குறிப்பிடத் தகுந்த சுகாதாரப் பிரச்சனையாகும். வெகு சில நீரிழிவு நோய் திட்டங்களே குடிவரவாளர்களையும் இனவாரியான சமூகங்களையும் மையப்படுத்தியதாக உள்ளன.

## இவ் வழிகாட்டியின் நோக்கம் என்ன?

- நீரிழிவு நோய் பீடிக்கக்கூடிய அதிக சாத்தியமுடைய இனத்துவ சமூகங்களுக்கு இந்நோயை முன்பே கண்டுபிடிக்கவும் கட்டுப்படுத்தவும் விழிப்புணர்வை ஊட்டல்
- தமது சமூகத்தின் பிரத்தியேக தேவைக்கு ஏற்ற நீரிழிவுத் திட்டத்தை தொடங்கவோ அல்லது நடைமுறைபடுத்தவோ விரும்புபவர்க்கு ஏற்ற திட்டத்தின் மாதிரிகளை வழங்கல்
- கைகூடிய தவிர்ப்பு நடைமுறைகளை பகிர்ந்துகொள்ளல்




## இவ் வழிகாட்டி யாருக்காக உருவாக்கப்பட்டது?

இவ் வழிகாட்டி இவர்களுக்காக:

- சேவை வழங்குவோர்
- நீரிழிவுத் திட்டக் குழு வல்லுனர்கள்
- குடியேற்ற ஆலோசகர்கள்
- சமூகங்களில் செயற்படும் சமூக தலைவர்களுக்கு

## இவ் வழிகாட்டி கொண்டுள்ளவை என்ன?

- நீரிழிவு நோயை முன்பே கண்டுபிடிக்கவும் கட்டுப் படுத்தவும் ஏற்ற திட்டங்களின் ஒரே பார்வை விளக்கம்
- நீரிழிவு நோய் பீடிக்கக்கூடிய அதிக சாத்தியமுடைய ஒரு சமூகத்துக்கோ அல்லது பல இன சமூகங்களுக்கு ஏற்ற திட்டங்கள்
- இச் சமூகங்களுக்கு திட்டங்கள் மூலம் சேவை வழங்கும் அமைப்புகள்
- மாதிரித் திட்டங்களாக பயன்படக்கூடிய திட்டங்களின் ஒரு தேர்ந்தெடுத்த தொகுப்பு

## இவ் வழிகாட்டிக்காக என்ன மாதிரியான திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன?

- முக்கியமாக கலாச்சார வித்தியாசங்களை கருத்தில் கொண்டு நீரிழிவு நோயை தடுக்கும், பின்போடும் அல்லது கட்டுப்படுத்தும் அறிவு, திறன், ஆதரவு வழங்கும்
- தெற்கு ஆசியா, கிழக்கு ஆசியா, ஆபிரிக்கா, ஹிஸ்பானிக் சமூகங்களுக்கானவை.

## என்ன வகையான திட்டங்கள் தரப்பட்டுள்ளன?

1. நீரிழிவு நோயின் தாக்கத்தை பரிசோதனை செய்தல்
2. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தல்
3. நீரிழிவு நோய் விழிப்புணர்வும் வாழ்க்கை முறை மாற்றமும்

## நீரழிவு நோய் திட்டங்களின் முக்கிய பங்குதாரர்கள் யார்?

- சமூக சுகாதார மையங்கள்
- பல் கலாச்சார அல்லது இனத்துவ சமூக அமைப்புகள்
- மத்திய அல்லது மாகாண அரசாங்க அமைப்புகள்/திணைக்களங்கள்
- வைத்தியசாலைகளும் மருத்துவ நிலையங்களும்
- அங்காடிகள், வழிபாட்டுத்தலங்கள், பல்கலைக்கழகங்கள்
- இலாப-நோக்கமற்ற அமைப்புகள்
- சுகாதாரப் பராமரிப்பாளர்களும் வல்லுனர்களும்

## இத் திட்டங்கள் ஏன் உருவாக்கப்பட்டன?

- நீரிழிவு நோயால் தாக்கமுறுவோர் அதிகரிப்பதால்
- இந்நோயால் பாதிப்படையும் இனத்துவ மக்கள் தொகை கூடுவதால்
- இருக்கும் நீரிழிவுத் திட்டங்களில் கலாச்சார வித்தியாசங்கள் பற்றிக் கருத்தில் எடுக்காமையால்
- புதிய கனேடியர்கள் சுகத்தைப் பாதிக்கும் பிரச்சனைகளை எதிர்கொள்வதால்
- மொழி, சுகாதார அறிவு, நிதி ஆகியன சார்ந்த தடைகள்
- தகவல் பெறவும் சேவை பெறவும் தொடர்புகொள்ளத் தெரியாமை

## தவிர்ப்பு நடைமுறைகளின் வகைகள்

| நீரிழிவின் தாக்கத்தைப் கணிப்பிடல்/பரிசோதித்தல் | நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தல் | நீரிழிவு நோய் விளிப்புணர்வும் வாழ்க்கை முறை மாற்றமும் |
|---|---|---|
| • குழுக் கற்பித்தல் திட்டங்கள்<br>• வருடாந்த சுகாதாரப் பேச்சுகள்<br>• சுகாதாரக் கூட்டங்களில் செய்யும் பரிசோதனை<br>• முன்னதாக கண்டுபிடிக்கும் விசேட மருத்துவ அகங்கள்<br>• சமூக நிகழ்ச்சிகளில் செய்யும் பரிசோதனை | • நீரிழிவு நோய் பற்றிக் கற்பிக்கும் சமூக வகுப்புகள்<br>• குறிப்பிட்ட மொழியில் பட்டறைகள்<br>• ஆதரவும் அனுசரணையும் தரும் பல் செயல்பாடுடைய குழுக்கள்<br>• வல்லுனர்களுடனும் விசேட வல்லமையுடையோருடனு ம் இணைந்து செயல்படல்<br>• சுய கட்டுப்பாட்டுத் திறனும் அறிவும் | • பன்முகச் செயல்பாட்டுக் குழு மக்கள் குழுக்களுக்குத் தரும் பரப்புரைகள்<br>• கூட்டுமுறைச் சமையல் பட்டறைகள்<br>• வாழ்க்கை முறை மாற்றங்கள்<br>• சத்தான உணவும் உடல் பயிற்சியும்<br>• சுகம் பேணும் விருந்துகள் |

## இவை சென்றடைய என்ன உத்திகள் பிரயோகிக்கப்படுகின்றது?

- பாதிப்படையும் மக்கள் கூடும் சுகாதார அங்காடிகள், நிகழ்ச்சிகளூடாக வழங்கல்
- இனவாரியான ஊடகங்கள் ஊடாக தெரிவித்தல்
- ESL (ஆங்கிலம் பேசக் கற்கும்) வகுப்புகளூடாகத் தருதல்
- முன்னேற்றவும் வசதிகளை உபயோகிக்கவும் மற்றைய இனமக்களின் அமைப்புகளுடன் இணைந்து செயற்படல்
- சமுதாயத் தலைவர்கள், சமயத் தலைவர்கள், பங்குதாரர்களைச் சேர்த்துக்கொள்ளல்
- தகவல்களை அங்காடிகள், மருத்துவர் அகங்கள், இனத்துவக் கடைகள், வணங்குமிடங்களூடாக வழங்கல்
- உள்ளிட அறிவித்தல்கள் மூலமாயும் இணையதளங்களூடாகவும் முன்னெடுத்தல்
- புதிய குடிவரலாளர்களும், குறைந்த வருமானமுடைய குடும்பங்களும் வாழும் இடங்களில் வீடு வீடாகத் தொடர்பு கொள்ளல்

CEC மேலதிகமான தகவல்களுக்கு CEC இணையதளத்துக்குச் செல்லவும் : **www.ethnocultural.ca**

*இவ் வழிகாட்டி பிரசுரமாவதற்கு கனடா மக்கள் சுகாதார அமைப்பு நிதியுதவி வழங்கியுள்ளது*